30/08/2024.

நல்லூர் ஆலய மகோற்சவ காலத்தில், முருகப் பெருமான
வலம்வருகின்ற வெளிவீதிச் சூழலில் புனிதத்தையும்,
பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு,
யாழ் மாநகர சபையிடம் தவத்திரு. வேலன் சுவாமிகள்
கோரிக்கை.

---

காலங்காலமாக நல்லூர் ஆலய மகோற்சவ காலத்தில் யாழ் மாநகர சபையானது தனது பணிகளை செவ்வனே சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கிறது. ஆனால் இவ்வருடம் சிலரின் அழுத்தங்கள் காரணமாக, காலங்காலமாக பேணப்பட்டு வந்த நடைமுறைகளை யாழ் மாநகர சபையானது மாற்ற முயற்சிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. தன்முன் அனைவரும் சமம் என்ற நல்லூர் கந்தப் பெருமானுடைய தனித்துவத்தை பாதிக்கும் வகையில், ஒரு சிலரை முருகப்பெருமான் வலம்வரும் வீதியில் பாதணிகளுடன் அனுமதிப்பது பல்லாயிரக்கணக்கான முருக அடியார்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும். அத்துடன் அங்கப்பிரதிஸ்டை செய்கின்ற அடியவர்களுக்கு சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும். அத்துடன் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் நடமாடுகின்ற வெளிவீதியில் அத்தியாவசிய வாகனங்களை தவிர ஏனைய வாகனங்களை அனுமதிப்பது அடியவர்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதோடு பக்தர்களிடையே பாகுபாட்டையும் ஏற்படுத்தும். ஆகவே காலங்காலமாக பேணப்பட்டு வந்த அதே நடைமுறைகளை இவ்வருட நல்லூர் மகோற்சவ காலத்திலும் நடைமுறைப்படுத்துமாறு யாழ் மாநகரசபையை வேண்டிக் கொள்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி, விளங்குக உலகமெல்லாம்."

தவத்திரு வேலன் சுவாமிகள்
வேலன்
சிவகுரு ஆதீனம்
692, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.